# சாட்சிய வாக்குமூலம்
# மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

| | | | |
|---|---|---|---|
| வா.சா. | 2 | நாள் : 14.11.2024 | |
| அசல் வழக்கு எண். | 106/2022 | | |
| பெயர் | முத்தமிழ்செல்வன் | த/பெ | பாலமுருகன் குண்டு |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | நாங்கூர் | தாலூக்கா | சீர்காழி |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழிசெய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை:**

நான் இவ்வழக்கில் வாதி தரப்பு சாட்சி ஆவேன். முதல் விசாரணை சங்கதிகளை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதிலுள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டவைதான்.

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

வாதியை எனக்கு எப்படி தெரியும் என்றால் விவசாய வேலை இருந்தால் கூப்பிடுவார்கள் அதனால் தெரியும். எந்த சொத்து குறித்து வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்று தெரியுமா என்றால் தெரியும். நாங்கூர் சொத்து குறித்து வழக்கு தாக்கல் செய்துள்ளார். சொத்து பற்றிய விவரம் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தை நேரடியாக பார்த்துள்ளேனா என்றால் அந்த சொத்தில் விவசாய வேலை செய்திருக்கிறேன். நெல் பயிர் செய்வார்கள். வாதி என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் நிலம் தனக்கு சொந்தமானது என்று கேஸ் போட்டிருக்கிறார். பிரதிவாதிகள் தரப்பில் என்ன கட்சி எழுதிப்போட்டிருக்கிறார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. வாதியின் தகப்பனாரை எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். வாதியின் தகப்பனார் சுப்பராயன் டிரஸ்ட் என்ற டிரஸ்டை உருவாக்கி டிரஸ்டின் வளர்சிக்காக தாவா சொத்தை பயன்படுத்தி கொள்ளவேண்டுமென்று சொல்லியுள்ளது தெரியுமா என்றால் டிரஸ்டே கிடையாது. வாதி தாவா 1 முதல் 3 சர்வே நம்பரில் உள்ள சொத்தில் என்ன

பயிர் செய்வார் என்று தெரியுமா என்றால் நெல் பயிர் செய்வார். நான் வாதிக்கு வேண்டப்பட்டவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.